# FORM-3
# MINUTES OF THE COUNCIL MEETINGS
## குளச்சல் நகராட்சி

குளச்சல் நகராட்சி மன்றத்தின் சாதாரணக்கூட்டம் 2014 டிசம்பர் திங்கள் 31–ம் நாள் (31.12.2014) புதன்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு நகர்மன்ற கூட்ட அரங்கில் வைத்து நடைபெற்றது.

முன்னிலை:
நகர்மன்ற தலைவர்
குளச்சல் நகர்மன்றம்.

**பொருள் எண். 1**

இந்நகராட்சிக்கு சொந்தமான அசையும் மற்றும் அசையா சொத்துக்களை குத்தகை மூலம் ஏலம் விடப்பட்ட இனங்களான நகராட்சி பேருந்து நிலையம் வந்து செல்லும் பேருந்துகளுக்கான கட்டணம் வசூல் செய்யும் உரிமம், நகராட்சி பகுதியிலிருந்து வெளியே கொண்டு செல்லும் மீன்களுக்கு கட்டணம் வசூல் செய்யும் உரிமம், பேருந்து நிலைய கட்டண கழிப்பிடம், அண்ணாசிலை பகுதியிலுள்ள கட்டண கழிப்பிடம், இந்நகராட்சி எல்கைக்குட்பட்ட பொட்டல் சாலை ஓரம் மற்றும் நகராட்சி அலுவலக வளாகத்திலுள்ள தென்னை மரத்தின் மேல் ஆதாயம் (மகசூல்) அனுபவிக்கும் உரிமம், பேருந்து நிலைய தொலைக்காட்சி பெட்டி மூலம் விளம்பரம் செய்யும் உரிமம் ஆகியவை 31.03.2015 மார்ச் மாதத்தோடு முடிவடைவதால், குத்தகை மற்றும் ஏலம் மூலம் ஒப்பந்தப்புள்ளி கோரவும், அதற்கான விளம்பர செலவினங்களை மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். அ1/11062 /2012)

**தீர்மானம் எண்.1077 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 2**

அம்பேத்கார் தினசரி, வாரச்சந்தையினுள் உள்ள கடைகள், தரைப்பாக கடைகளுக்கு கட்டணம் வசூல் செய்வதற்கு தினசரி கட்டணம் இந்நகர்மன்ற தீர்மானம் எண்.191, நாள் 30.03.2012–ன்படி உயர்வு செய்து நகராட்சி மூலம் கட்டணம் வசூல் செய்யப்பட்டு வருகிறது. ஆகவே இவ்வினத்தையும் சேர்த்து குத்தகை மூலம் ஏலம் விட ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். அ1/11062 /2012)

**தீர்மானம் எண்.1078 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 3**

இந்நகராட்சி பொதுமக்கள் நலன் மற்றும் பாதுகாப்பை கருத்தில் கொண்டு நகராட்சி அலுவலக வளாகம் மற்றும் வசூல் மைய தொடர் கண்காணிப்பிற்காகவும், நகராட்சி அலுவலக வளாகத்தில் CCTV கண்காணிப்பு கேமராக்கள் பொருத்துவதற்காக தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டு தொகை ரூ.46,000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/2944 /2014)

**தீர்மானம் எண்.1079 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 4**

இந்நகராட்சி வசூல் மைய பணிகளை துரிதமாக மேற்கொள்வதற்கும், போலி ரூபாய் நோட்டுகளை கண்டுபிடிப்பதற்கும் தேவையான ரூபாய் நோட்டு எண்ணும் கருவி Cash Counting Machine with Fake note detector வாங்குவதற்காக தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டு தொகை ரூ. 8,500/—க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/2945 /2014)

**தீர்மானம் எண்.1080 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 5**

இந்நகராட்சியில் பணிபுரியும் அனைத்து பணியாளர்களின் வருகைப் பதிவினையும் மின்னணு முறையில் பதிவு செய்வதற்கு தேவையான விரல் பதிவு செய்யும் கருவி (Finger Print Attendance Machine) பொருத்துவதற்காக தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டு தொகை ரூ.25,000/—க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம் (ந.க.எண்.இ1/2946 /2014)

**தீர்மானம் எண்.1081 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 6**

இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவிற்கு போதுமான துப்புரவு பணியாளர்கள் இல்லாமையால், பொது சுகாதார நலன் கருதி டெங்கு நோய் தடுப்பு நடவடிக்கைக்காக அபேட் மருந்து தெளித்தல், வடிகால்கள் தூர் வாருதல், புகைமருந்து அடித்தல் ஆகிய பணிகளை தினமும் மேற்கொள்ள மாவட்ட ஆட்சித்தலைவர், நாகர்கோவில் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.அ1/110610/2013 நாள் 25.04.2013—ல் தெரிவிக்கப்பட்டுள்ள தினக்கூலி அடிப்படையில் 10 பணியாளர்களை பணியமர்த்த 89 நாட்களுக்கு இந்நகர்மன்ற தீர்மானம் 996 நாள் 26.08.2014—ன்படி ஒப்புதல் அளிக்கப்பட்டு 01.08.2014 முதல் 30.11.2014 —ல் முடிவடைகிறது. மேலும் பொது சுகாதார அவசர அவசியம் கருதி, மேலும் தினக்கூலி அடிப்படையில் 5 பணியாளர்கள் பணியமர்த்த 89 நாட்களுக்கு இந்நகர்மன்ற தீர்மானம் எண்.1040 நாள் 27.11.2014—ன்படி ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. மேலும் கொசுப்புழு உற்பத்தியாவதை தடுக்கவும், முதிர் கொசுக்களை அழிக்கவும், வடிகால்களை தூர் வாரவும் மேலும் 89 நாட்களுக்கு 15 தினக்கூலி பணியாளர்களை கால நீட்டிப்பு செய்யவும், அதற்கான உத்தேச செலவு ரூ.4,50,000/—க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : பொது சுகாதார நலன் கருதி மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.எச்1/1177 /2014)

**தீர்மானம் எண்.1082 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 7**

இந்நகராட்சி ஈப்பு வாகனம் TN.74.V.3530 —ல் பராமரிப்பு பணிகள் மேற்கொண்ட வகையில் செலவு செய்யப்பட்ட ரூ.730/— இந்நகராட்சி பொது நிதியிலிருந்து சம்மந்தப்பட்ட ஓட்டுநருக்கு வழங்குவதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.இ1/5030 /2010)

**தீர்மானம் எண்.1083 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 8**

இந்நகராட்சிக்கு TNUDP மூலம் வழங்கப் பெற்ற புதிய கணனிகளில் மின்னஞ்சல் மற்றும் இணையதளம் தொடர்பாக பணிகள் அதிகமாக மேற்கொள்ளப்படுவதால் Internet மற்றும் U.S.B.Secuirty Antivirus Software நிறுவ வேண்டியுள்ளது. எனவே அதற்கான புதிய Antivirus Software வாங்குவதற்காக நேரடியாக பெறப்பட்ட உள்ளூர் விலைப்புள்ளிகள் குறித்த விவரம் பின்வருமாறு :

| | | |
|---|---|---|
| 1. | M/s.Segment Systems,<br>Chithambara Nager,<br>Nagercoil. | Rs. 4,300/- |
| 2. | M/s.Ace Systems,<br>WCC Road,<br>Nagercoil. | Rs. 3,950/- |

மேற்காணும் இரண்டு விலைப்புள்ளிகளில் M/s.Ace Systems, Nagercoil நிறுவனத்தின் குறைந்த விலைப்புள்ளியை ஏற்று வினியோக உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு :** (1) மேற்படி Antivirus Software வாங்குவதற்கான உத்தேச செலவுத் தொகையினை இந்நகராட்சி பொதுநிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

(2) M/s.Ace Systems, Nagercoil நிறுவனத்தின் குறைந்த விலைப்புள்ளியை ஏற்று வினியோக உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.AP/3124/2014)

**தீர்மானம் எண்.1084 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 9**

இந்நகராட்சியில் குடிநீர் பராமரிப்பு பணிகளுக்கு பயன்படுத்திய மின்மோட்டார்கள், வால்வுகள் மற்றும் பழைய பொருட்கள் கீழ்க்கண்ட விவரப்படி ஏலத்திற்கு உள்ளன. மேலும் அவற்றை உத்தேச மதிப்பீடு ரூ.1,70,000/—க்கு ஏலம் விடுவதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1 | 12.50 H.P. மோனோ பிளாக் மோட்டார் | 1 எண்ணம் |
| 2 | 5 H.P. மோனோ பிளாக் மோட்டார் | 3 " |
| 3 | 10 H.P. சப்மெர்சிபுள் மோட்டார் | 14 " |
| 4 | 6 " Sluice Valve | 3 " |
| 5 | 5 " Sluice Valve | 5 " |
| 6 | 4 " Sluice Valve | 5 " |
| 7 | 3 " Sluice Valve | 14 " |
| 8 | Hand Pump | 1 " |
| 9 | 21/2 " Gate Valve | 5 " |
| 10 | 3 " Gate Valve | 5 " |
| 11 | 2 " Gate Valve | 5 " |
| 12 | 3/4 " Air Valve | 1 " |
| 13 | 5 " Air Valve | 1 " |
| 14 | Non return valve | 1 " |
| 15 | Filter | 1 " |
| 16 | Cable Wire | |
| 17 | 6" PVC Bend | 1 Piece |

| | | |
|---|---|---|
| 18 | 5" PVC Pipe | 1 " |
| 19 | 4" PVC Pipe | 1 " |
| 20 | 2" PVC Pipe | 3 " |
| 21 | 4" G.I. Pipe | 7 " |
| 22 | 3" G.I. Pipe | 9 " |
| 23 | 2" G.I. Pipe | 46 " |
| 24 | Panel Board | 7 " |
| 25 | Main Switch | 6 " |

**அ.குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/8058 /2011)

**தீர்மானம் எண்.1085 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 10**

இந்நகராட்சிக்குட்பட்ட கொட்டில்பாடு பகுதியில் புராதன நகர மேம்பாட்டுத் திட்டம், நகர் ஊரமைப்பு மேம்பாட்டு நிதி 2014–15–ன்கீழ் ரூ.10.00 இலட்சம் மதிப்பீட்டில் பூங்கா அமைப்பதற்கு, இந்நகர்மன்றம் தனது தீர்மானம் எண்.1047 நாள் 27.11.2014–ன் மூலம் ஏற்கனவே ஒப்புதல் வழங்கியுள்ளது. அதன் அடிப்படையில் 18.12.2014 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த விவரம் பின்வருமாறு :

| | | |
|---|---|---|
| 1. | திரு.C.செல்லநாடார், ஒப்பந்தத்தாரர் | மதிப்பீட்டைவிட 0.24% குறைவு. |
| 2. | திரு.C.தேவராஜ் ஒப்பந்தத்தாரர் | மதிப்பீட்டைவிட 1.32% அதிகம். |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், திரு.C.செல்லநாடார், ஒப்பந்தத்தாரர் மதிப்பீட்டைவிட 0.24% குறைவாக அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளியை ஏற்று, பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு:**1) மதிப்பீட்டு தொகை ரூ.10.00 இலட்சத்தில், திட்ட மான்யத் தொகை ரூ.9.00 இலட்சம் போக மீதி தொகை ரூ.1.00 இலட்சத்தை, இந்நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

2) திரு.C.செல்லநாடார், ஒப்பந்தத்தாரர், மதிப்பீட்டைவிட 0.24% குறைவாக அளித்துள்ள ஒப்பந்தப் புள்ளியை ஏற்று, பணி உத்தரவு வழங்க மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/4585/2009)

**தீர்மானம் எண்.1086 ஒத்திவைக்கப்பட்டது.**

**பொருள் எண். 11**

இந்நகராட்சிக்குட்பட்ட மரமடி குருசடி அருகில் புராதன நகர மேம்பாட்டுத் திட்டம் நகர் ஊரமைப்பு மேம்பாட்டு நிதி 2014–15–ன்கீழ் ரூ.10.00 இலட்சம் மதிப்பீட்டில் பூங்கா அமைப்பதற்கு, இந்நகர்மன்றம் தனது தீர்மானம் எண்.1047 நாள் 27.11.2014–ன் மூலம் ஏற்கனவே ஒப்புதல் வழங்கியுள்ளது. அதன் அடிப்படையில் 18.12.2014 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த விவரம் பின்வருமாறு :

| | | |
|---|---|---|
| 1. | திரு.S.சத்தியதாஸ், ஒப்பந்தத்தாரர் | மதிப்பீட்டைவிட 0.31% குறைவு. |
| 2. | திரு.C.செல்லநாடார், ஒப்பந்தத்தாரர் | மதிப்பீட்டைவிட 1.98% அதிகம். |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், திரு.S.சத்தியதாஸ், ஒப்பந்தத்தாரர் மதிப்பீட்டைவிட 0.31% குறைவாக அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளியை ஏற்று, பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு:**1) மதிப்பீட்டுத் தொகை ரூ.10.00 இலட்சத்தில், திட்ட மான்யத் தொகை ரூ.9.00 இலட்சம் போக மீதி தொகை ரூ.1.00 இலட்சத்தை இந்நகராட்சி பொதுநிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

2) திரு.S.சத்தியதாஸ், ஒப்பந்தத்தாரர், மதிப்பீட்டைவிட 0.31% குறைவாக அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளியை ஏற்று, பணி உத்தரவு வழங்க மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/4585/2009)

**தீர்மானம் எண்.1087 ஒத்திவைக்கப்பட்டது.**

**பொருள் எண். 12**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.1–ல் தொலைபேசி நிலைய சாலையிலிருந்து கல்லத்திவிளை செல்லும் குறுக்கு தெருவில் (கதவு எண்.1–192/1) மூடியுடன் கூடிய வடிகால் ஓடை மற்றும் பேவர் பிளாக் சாலை அமைக்கும் பணிக்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.3,60,000/–க்கு, இந்நகர்மன்றம் தனது தீர்மானம் எண்.805 நாள் 30.12.2014–ன் மூலம் ஏற்கனவே ஒப்புதல் வழங்கியுள்ளது. அதன் அடிப்படையில் 18.12.2014 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த விவரம் பின்வருமாறு :

| | | |
|---|---|---|
| 1. | திரு.S.சத்தியதாஸ்,<br>ஒப்பந்தத்தாரர் | மதிப்பீட்டைவிட 0.02% குறைவு. |
| 2. | திரு.C.செல்லநாடார்,<br>ஒப்பந்தத்தாரர் | மதிப்பீட்டைவிட 1.05% அதிகம். |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், திரு.S.சத்தியதாஸ், ஒப்பந்தத்தாரர் மதிப்பீட்டைவிட 0.02% குறைவாக அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளியை ஏற்று, பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/4089 /2013)

**தீர்மானம் எண்.1088 ஒத்திவைக்கப்பட்டது.**

**பொருள் எண். 13**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.24–ல் காமராஜர் குறுக்கு தெருவில் மூடியுடன் கூடிய வடிகால் ஓடை மற்றும் பேவர் பிளாக் சாலை அமைக்கும் பணிக்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.3,70,000/–க்கு, இந்நகர்மன்றம் தனது தீர்மானம் எண்.807 நாள் 30.12.2014–ன் மூலம் ஏற்கனவே ஒப்புதல் வழங்கியுள்ளது. அதன் அடிப்படையில் 18.12.2014 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த விவரம் பின்வருமாறு :

| | | |
|---|---|---|
| 1. | திரு.S.சத்தியதாஸ்,<br>ஒப்பந்தத்தாரர் | மதிப்பீட்டைவிட 0.05% குறைவு. |
| 2. | திரு.C.செல்லநாடார்,<br>ஒப்பந்தத்தாரர் | மதிப்பீட்டைவிட 0.54% அதிகம். |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், திரு.S.சத்தியதாஸ், ஒப்பந்தத்தாரர் மதிப்பீட்டைவிட 0.05% குறைவாக அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளியை ஏற்று, பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/4118 /2013)

**தீர்மானம் எண்.1089 ஒத்திவைக்கப்பட்டது.**

**பொருள் எண். 14**

இந்நகராட்சிக்குட்பட்ட காமராஜர் பேருந்து நிலைய கடைகள் மற்றும் பயணிகள் இருக்கைகள் ஆகியவற்றில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்வதற்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.3,20,000/—க்கு, இந்நகர்மன்றம் தனது தீர்மானம் எண்.1049 நாள் 27.11.2014—ன் மூலம் ஏற்கனவே ஒப்புதல் வழங்கியுள்ளது. அதன் அடிப்படையில் 18.12.2014 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த விவரம் பின்வருமாறு :

| | | |
|---|---|---|
| 1. | திரு.C.தேவராஜ்,<br>ஒப்பந்தத்தாரர் | மதிப்பீட்டைவிட 0.03% குறைவு. |
| 2. | திரு.C.செல்லநாடார்,<br>ஒப்பந்தத்தாரர் | மதிப்பீட்டைவிட 1.27% அதிகம். |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், திரு.C.தேவராஜ், ஒப்பந்தத்தாரர் மதிப்பீட்டைவிட 0.03% குறைவாக அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளியை ஏற்று, பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். இ1/2660/2014)

**தீர்மானம் எண்.1090 ஒத்திவைக்கப்பட்டது.**

**பொருள் எண். 15**

இந்நகராட்சிக்குட்பட்ட அலுவலக கணனி பிரிவில் டைல்ஸ் பதித்தல், வயரிங் பணிகள் மேற்கொள்ளுதல் மற்றும் பொது சுகாதாரம், பொறியியல் மற்றும் பொதுப்பிரிவு கட்டிடங்களில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்வதற்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.3,30,000/—க்கு, இந்நகர்மன்றம் தனது தீர்மானம் எண்.1051 நாள் 27.11.2014—ன் மூலம் ஏற்கனவே ஒப்புதல் வழங்கியுள்ளது. அதன் அடிப்படையில் 18.12.2014 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த விவரம் பின்வருமாறு :

| | | |
|---|---|---|
| 1. | திரு.C.தேவராஜ்,<br>ஒப்பந்தத்தாரர் | மதிப்பீட்டைவிட 0.05% குறைவு. |
| 2. | திரு.C.செல்லநாடார்,<br>ஒப்பந்தத்தாரர் | மதிப்பீட்டைவிட 2.40% அதிகம். |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், திரு.C.தேவராஜ், ஒப்பந்தத்தாரர் மதிப்பீட்டைவிட 0.05% குறைவாக அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளியை ஏற்று, பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். இ1/2661/2014)

**தீர்மானம் எண்.1091 ஒத்திவைக்கப்பட்டது.**

**பொருள் எண். 16**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.6—ல் கொட்டில்பாடு கல்லறைத் தோட்டம் முன்புறம் கான்கிரீட் சாலை அமைத்தல் மற்றும் வடிகால் ஓடையில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்வதற்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.1,20,000/—க்கு, இந்நகர்மன்றம் தனது தீர்மானம் எண்.1054 நாள் 27.11.2014—ன் மூலம் ஏற்கனவே ஒப்புதல் வழங்கியுள்ளது. அதன் அடிப்படையில் 18.12.2014 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த விவரம் பின்வருமாறு :

| | | |
|---|---|---|
| 1. | திரு.C.தேவராஜ்,<br>ஒப்பந்தத்தாரர் | மதிப்பீட்டைவிட 0.01% குறைவு. |
| 2. | திரு.C.செல்லநாடார்,<br>ஒப்பந்தத்தாரர் | மதிப்பீட்டைவிட 0.48% அதிகம். |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், திரு.C.தேவராஜ், ஒப்பந்தத்தாரர் மதிப்பீட்டைவிட 0.01% குறைவாக அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளியை ஏற்று, பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். இ1/2662/2014)

**தீர்மானம் எண்.1092 ஒத்திவைக்கப்பட்டது.**

**பொருள் எண். 17**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.10 துறைமுகத்தெருவில் கான்கிரீட் சாலை அமைக்கும் பணிக்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.1,00,000/—க்கு, இந்நகர்மன்றம் தனது தீர்மானம் எண்.1053 நாள் 27.11.2014—ன் மூலம் ஏற்கனவே ஒப்புதல் வழங்கியுள்ளது. அதன் அடிப்படையில் 18.12.2014 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த விவரம் பின்வருமாறு :

| | | |
|---|---|---|
| 1. | திரு.S.பாலகிருஷ்ணன்,<br>ஒப்பந்தத்தாரர் | மதிப்பீட்டைவிட 0.01% குறைவு. |
| 2. | திரு.C.செல்லநாடார்,<br>ஒப்பந்தத்தாரர் | மதிப்பீட்டைவிட 0.64% அதிகம். |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், திரு.S.பாலகிருஷ்ணன், ஒப்பந்தத்தாரர் மதிப்பீட்டைவிட 0.01% குறைவாக அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளியை ஏற்று, பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். இ1/2665/2014)

**தீர்மானம் எண்.1093 ஒத்திவைக்கப்பட்டது.**

**பொருள் எண். 18**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.14 துறைமுகத்தெரு பொழிமுகம் அருகில் மூடியுடன் கூடிய வடிகால் ஓடை மற்றும் சாலை அமைத்தல் பணிக்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.1,00,000/—க்கு, இந்நகர்மன்றம் தனது தீர்மானம் எண்.1052 நாள் 27.11.2014—ன் மூலம் ஏற்கனவே ஒப்புதல் வழங்கியுள்ளது. அதன் அடிப்படையில் 18.12.2014 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த விவரம் பின்வருமாறு :

| | | |
|---|---|---|
| 1. | திரு.S.பாலகிருஷ்ணன்,<br>ஒப்பந்தத்தாரர் | மதிப்பீட்டைவிட 1.01% குறைவு. |
| 2. | திரு.C.செல்லநாடார்,<br>ஒப்பந்தத்தாரர் | மதிப்பீட்டைவிட 1.28% அதிகம். |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், திரு.S.பாலகிருஷ்ணன், ஒப்பந்தத்தாரர் மதிப்பீட்டைவிட 1.01% குறைவாக அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளியை ஏற்று, பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். இ1/2664/2014)

**தீர்மானம் எண்.1094 ஒத்திவைக்கப்பட்டது.**

**பொருள் எண். 19**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.22—ல், இராஜாக்கமங்கலம் பிரதான சாலையிலிருந்து பண்டகசாலைபுரம் செல்லும் சாலை முகப்பில் சிறுபாலம் அமைப்பதற்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.1,80,000/—க்கு, இந்நகர்மன்றம் தனது தீர்மானம் எண்.1046 நாள் 27.11.2014—ன் மூலம் ஏற்கனவே ஒப்புதல் வழங்கியுள்ளது. அதன் அடிப்படையில் 18.12.2014 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த விவரம் பின்வருமாறு :

| | | |
|---|---|---|
| 1. | திரு.C.தேவராஜ், ஒப்பந்தத்தாரர் | மதிப்பீட்டைவிட 0.01% குறைவு. |
| 2. | திரு.C.செல்லநாடார், ஒப்பந்தத்தாரர் | மதிப்பீட்டைவிட 0.92% அதிகம். |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், திரு.C.தேவராஜ், ஒப்பந்தத்தாரர் மதிப்பீட்டைவிட 0.01% குறைவாக அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளியை ஏற்று, பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். இ1/2667/2014)

**தீர்மானம் எண்.1095 ஒத்திவைக்கப்பட்டது.**

**பொருள் எண். 20**

இந்நகராட்சிக்குட்பட்ட காமராஜர் பேருந்து நிலையம் அருகில் அமைக்கப்பட்டுள்ள அம்மா உணவகத்திற்கு தேவையான பாத்திரங்கள், மேஜைகள் வாங்குதல் மற்றும் குடிநீர் R.O.Plant அமைத்தல் ஆகியவற்றிற்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.6,50,000/—க்கு, திட்ட நிதியை எதிர்நோக்கி பொது நிதியில் மேற்கொள்ள இந்நகர்மன்றம் தனது தீர்மானம் எண்.1048 நாள் 27.11.2014—ன் மூலம் ஏற்கனவே ஒப்புதல் வழங்கியுள்ளது. அதன் அடிப்படையில் 18.12.2014 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த விவரம் பின்வருமாறு :

| | | |
|---|---|---|
| 1. | திரு.C.செல்லநாடார், ஒப்பந்தத்தாரர் | மதிப்பீட்டைவிட 0.04% குறைவு. |
| 2. | திரு.C.தேவராஜ், ஒப்பந்தத்தாரர் | மதிப்பீட்டைவிட 0.047% அதிகம். |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், திரு.C.செல்லநாடார், ஒப்பந்தத்தாரர் மதிப்பீட்டைவிட 0.04% குறைவாக அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளியை ஏற்று, பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம். திட்ட நிதி பெறப்பட்டவுடன் பொது நிதியில் ஈடு செய்து கொள்ளலாம்.

(ந.க.எண். இ1/2666/2014)

**தீர்மானம் எண்.1096 ஒத்திவைக்கப்பட்டது.**

**பொருள் எண். 21**

இந்நகராட்சி பொறியியல் பிரிவில் குடிநீர் பணிகளுக்காக தனியார் மூலம் ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்களை நியமனம் செய்வதற்கான உத்தேச செலவுத் தொகை ரூ.1,20,000/—க்கு, இந்நகர்மன்றம் தனது தீர்மானம் எண்.1038 நாள் 27.11.2014—ன் மூலம்

ஏற்கனவே ஒப்புதல் வழங்கியுள்ளது. அதன் அடிப்படையில் 18.12.2014 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த விவரம் பின்வருமாறு :

| | | |
|---|---|---|
| 1. | திரு.C.தேவராஜ்,<br>ஒப்பந்தத்தாரர் | மதிப்பீட்டு விகிதம் |
| 2. | திரு.C.செல்லநாடார்,<br>ஒப்பந்தத்தாரர் | மதிப்பீட்டைவிட 0.98% அதிகம். |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், திரு.C.தேவராஜ், ஒப்பந்தத்தாரர் அளித்துள்ள மதிப்பீட்டு விகித ஒப்பந்தப்புள்ளியை ஏற்று, பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். இ1/2691/2014)

**தீர்மானம் எண்.1097 ஒத்திவைக்கப்பட்டது.**

(ஒம்) அ.நசீர்,
நகர்மன்றத் தலைவர்
குளச்சல் நகராட்சி

(உண்மை நகல்)

ஆணையர்(பொ)
குளச்சல் நகராட்சி

## குளச்சல் நகராட்சி

குளச்சல் நகராட்சி மன்றத்தின் அவசரக்கூட்டம் 2014 டிசம்பர் திங்கள் 16–ம் நாள் (16.12.2014) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு நகர்மன்ற கூட்ட அரங்கில் வைத்து நடைபெற்றது.

முன்னிலை:
நகர்மன்ற தலைவர்
குளச்சல் நகர்மன்றம்.

**பொருள் எண். 1**

இந்நகராட்சிக்குட்பட்ட பாலத்தன்கரையில் அமைக்கப்பட்டிருந்த குடிநீரேற்றும் நிலையம்– 4 மிகவும் மோசமாக பழுதடைந்த காரணத்தால், அதன் அருகில் புதியதாக நீரேற்றும் நிலையம் கட்டப்பட்டது. எனவே பழைய கட்டிடத்தில் உள்ள பொட்டல் மேல்நிலை நீர்தேக்க தொட்டிக்கு நீரேற்றும் இரண்டு ஆழ்துளை கிணறுகளின் மின் இணைப்பு மற்றும் துறைமுகத் தெருவில் அமைந்துள்ள மேல்நிலை நீர்தேக்க தொட்டிக்கு நீரேற்றும் ஒரு ஆழ்துளை கிணற்றின் மின் இணைப்பு, ஆகிய மூன்று மின் இணைப்பையும் புதியதாக கட்டப்பட்டுள்ள கட்டிடத்திற்கு மாற்றி அமைக்கவும், ஜெனரேட்டர் கேபிள்களை மாற்றி அமைப்பதற்கும் தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ.78,000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ2/1579/2014)

**தீர்மானம் எண்.1061 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 2**

இந்நகராட்சிக்குட்பட்ட பாலத்தன்கரையில் உள்ள பொட்டல் மேல்நிலை நீர்தேக்க தொட்டிக்கு நீரேற்றும் ஆழ்துளை கிணறு மற்றும் நகராட்சி அலுவலகத்தில் உள்ள மேல்நிலை நீர்தேக்க தொட்டிக்கு நீரேற்றும் ஆழ்துளை கிணறு ஆகியவை கிணற்றுக்குள் ஆழ்துளை கிணறு அமைத்துள்ளதால், மேற்படி இரண்டு ஆழ்துளை கிணறுகளிலும் மோட்டார் பழுது நீக்கம் மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்வதற்கு மிகவும் சிரமமாகவும், பாதுகாப்பற்ற நிலையிலும் உள்ளது. எனவே மேற்படி இரண்டு ஆழ்துளை கிணறுகளுக்குள்ளும் Outer Pipe இறக்கி கிணறுகளை கிராவல் / மணல் கொண்டு நிரப்புவதற்கும் ஆகும் மதிப்பீட்டுத் தொகை ரூ.1,98,000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ2/1580–4/2014)

**தீர்மானம் எண்.1062 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 3**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.11, துறைமுகத்தெரு மீன்விற்கும் பிளாட் அருகில் உள்ள தெருவில் குடிநீர் குழாய் உடைந்து கழிவுநீர் சேர்வதாக புகார்கள் வரப்பெற்றது. மேற்படி தெருவில் வடிகால் ஓடையின் கீழ் குடிநீர் குழாய் பதிக்கப்பட்டுள்ளதால், உடைவு ஏற்பட்டுள்ள இடத்தினை கண்டறிய இயலவில்லை. எனவே மேற்படி தெருவில் வடிகால் ஓடையின் மறுபக்கம் புதியதாக 90mm PVC Pipe line அமைத்து பாதிக்கப்பட்ட வீடுகளுக்கு குடிநீர் குழாய் இணைப்பை மீண்டும் வழங்குவதற்கு ஆகும் மதிப்பீட்டு தொகை ரூ.85,000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ2/1616–2 /2014)

**தீர்மானம் எண்.1063 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 4**

இந்நகராட்சிக்குட்பட்ட 24 வார்டுகளுக்கும் 21 எண்ணம் ஆழ்துளை கிணறுகளிலிருந்து மின்மோட்டார்கள் மூலம் 10 மேல்நிலை நீர்தேக்க தொட்டிகளுக்குள் குடிநீர் ஏற்றப்பட்டு, தினமும் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இதனால் மின்மோட்டார்கள் நாள் ஒன்றிற்கு 20 மணிநேரம் இயங்கி வருவதால் அடிக்கடி பழுதுகள் ஏற்பட்டு வருகிறது. மேலும் குடிநீர் விநியோகம் செய்வதற்கு திறக்கப்படும் வால்வுகள் தினமும் திறந்து அடைக்க வேண்டியுள்ளதால் மேற்படி வால்வுகளும் அடிக்கடி பழுதாகிறது. மேலும் பகிர்மான குழாய்கள் மற்றும் பிரதான குழாய்களிலும் அடிக்கடி உடைவு ஏற்படுவதால் பழுதுகள் ஏற்பட்டு வருகிறது. எனவே மேற்படி பழுதுகளை உடனுக்குடன் சரி செய்து இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளுக்கு சீரான குடிநீர் விநியோகம் செய்வதற்கு 2014–15–ம் ஆண்டிற்கு இரண்டு மண்டலங்களாக பிரித்து மொத்த மதிப்பீடு தொகை ரூ.7,00,000/–க்கு மன்ற ஒப்புதல் பெறப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டதில் மேற்படி தொகை முழுவதும் செலவிடப்பட்டதால் இனிவரும் காலங்களுக்கு, பணிகள் மேற்கொள்வதற்கு ஏதுவாக கூடுதல் மதிப்பீட்டு தொகை ரூ.3,00,000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ2/1616–3/2014)

**தீர்மானம் எண்.1064 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 5**

இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் மனித கழிவுகளை மனிதனே அகற்றும் பணியாளர்கள் மற்றும் சுகாதாரமற்ற கழிப்பிடங்கள் குறித்த கணக்கெடுப்பு 25.08.2014 முதல் 08.09.2014 முடிய மேற்கொள்ளப்பட்டது. அதன்படி தயாரிக்கப்பட்ட இறுதி பட்டியலில் இந்நகராட்சி பகுதிகளில் மனித கழிவுகளை மனிதனே அகற்றும் பணியாளர்கள் மற்றும் சுகாதாரமற்ற கழிப்பறைகள் எதுவும் இல்லை என்ற தகவல் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் பதிவு செய்யலாம்.

(ந.க.எண்.எச்1/216 /2014)

**தீர்மானம் எண்.1065 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 6**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.20, இக்பால் தெருவில் மெர்க்கண்டைல் வங்கி முதல் இலப்பவிளை வரையிலான பகுதியில் ஏற்கனவே அமைந்துள்ள வடிகால் ஓடையில் மேல்மூடி அமைத்தல் மற்றும் இலப்பவிளை பள்ளி அருகில் ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள குறுகலான வடிகால் ஓடையை விரிவுப்படுத்தி மேல்மூடி அமைத்தல் ஆகிய பணிகளை மேற்கொள்வதற்கான மதிப்பீட்டு தொகை ரூ.3,50,000/–க்கு இந்நகர்மன்றம் தனது தீர்மானம் எண்.955 நாள் 30.07.2014–ன் மூலம் ஏற்கனவே ஒப்புதல் அளித்துள்ளது. அதனடிப்படையில் 25.11.2014 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த விபரம் பின்வருமாறு.

| | | |
|---|---|---|
| 1. | திரு.C.செல்லநாடார் ஒப்பந்தத்தாரர் | மதிப்பீட்டைவிட 0.01% குறைவு. |
| 2. | திரு.C.தேவராஜ் ஒப்பந்தத்தாரர் | மதிப்பீட்டைவிட 1.20% அதிகம். |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், திரு.C.செல்லநாடார், ஒப்பந்தத்தாரர் அளித்துள்ள மதிப்பீட்டைவிட 0.01% குறைவான ஒப்பந்தப்புள்ளியை ஏற்று, பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/1801/2014)

**தீர்மானம் எண்.1066 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 7**

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.31615/2013/இ2 நாள் 03.11.2014–ன்படி, இந்நகராட்சிக்கு வடகிழக்கு பருவமழை 2014–ன்கீழ், தற்காலிக சாலை சீரமைப்பு பணிகளுக்காக மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து ரூ.10.00 இலட்சம் விடுவிக்கப்பட்டது. அதனடிப்படையில் இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் வடகிழக்கு பருவமழை 2014–னால் சேதமடைந்த சாலைகளில் தற்காலிக சீரமைப்பு பணிகள் மேற்கொள்வதற்காக தேர்வு செய்யப்பட்ட பணிகள் குறித்த விவரம் பின்வருமாறு.

| வ.எண். | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | குளச்சல் நகராட்சிக்குட்பட்ட பள்ளிரோட்டில் தார்ச்சாலை ஒட்டுப் பணிகள் (Advanced patch work) மேற்கொள்ளுதல். | 6.50 |
| 2 | குளச்சல் நகராட்சிக்குட்பட்ட வெள்ளிப்பிள்ளையார் கோயில் சாலை முதல் கொட்டில்பாடு வரையிலுள்ள தார்ச்சாலையில் ஒட்டுப் பணிகள் (Advanced patch work) மேற்கொள்ளுதல். | 2.00 |
| 3 | குளச்சல் நகராட்சிக்குட்பட்ட துறைமுகத்தெரு–1–ல் சைமன்காலனி பாலம் அருகிலுள்ள தார்ச்சாலையில் ஒட்டுப் பணிகள் (Advanced patch work) மேற்கொள்ளுதல் | 1.50 |
| | **மொத்தம்** | **10.00** |

மேற்படி பணிகளின் அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு இந்நகர்மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத் தலைவரின் முன்அனுமதி பெற்று 25.11.2014 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த விபரம் பின்வருமாறு.

| | | |
|---|---|---|
| 1. | திரு.C.செல்லநாடார் ஒப்பந்தத்தாரர் | மதிப்பீட்டைவிட 0.12% குறைவு. |
| 2. | திரு.C.தேவராஜ் ஒப்பந்தத்தாரர் | மதிப்பீட்டைவிட 0.48% அதிகம். |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், திரு.C.செல்லநாடார் ஒப்பந்தத்தாரர் அளித்துள்ள மதிப்பீட்டைவிட 0.12% குறைவான ஒப்பந்தப்புள்ளியை ஏற்று, பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : (1) பணியின் அவசர அவசியம் கருதி இந்நகர்மன்ற தலைவரின் முன்அனுமதியை பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

(2) பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.C.செல்லநாடார், ஒப்பந்தத்தாரர் அளித்துள்ள மதிப்பீட்டைவிட 0.12% குறைவான ஒப்பந்தப்புள்ளியை ஏற்று, பணி உத்தரவு வழங்க மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/2759/2014)

**தீர்மானம் எண்.1067 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது. குறைந்த ஒப்பந்தபுள்ளி ஏற்றுகொள்ளப்பட்டது.**

**பொருள் எண். 8**

இந்நகராட்சி ஜெராக்ஸ் இயந்திரத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகளை சரி செய்வதற்காக அவசர அவசியம் கருதி நேரடியாக பெறப்பட்டுள்ள உள்ளூர் விலைப்புள்ளிகள் குறித்த விவரம் பின்வருமாறு

| | | |
|---|---|---|
| 1. | M/s.Diyano Copier Service,<br>Opp.Anna Stadium, Nagercoil. | Rs. 5,500/- |
| 2. | M/s.Sara Traders,<br>Kottar, Nagercoil. | Rs. 5,200/- |
| 3 | M/s.Friends Grafix Copier Service<br>Opp.Anna Stadium, Nagercoil. | Rs.4,950/- |

மேற்காணும் விலைப்புள்ளிகளில் M/s.Friends Grafix Copier Service, Nagercoil நிறுவனத்தின் ரூ.4,950/– க்கான விலைப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : (1) மேற்படி பணிக்கான செலவுத் தொகையினை இந்நகராட்சி பொதுநிதியின் கீழ் மேற்கொள்ள மன்ற அனுமதி வழங்கலாம்.

(2) M/s.Friends Grafix Copier Service, Nagercoil நிறுவனம் அளித்துள்ள குறைந்த விலைப்புள்ளியை ஏற்று, பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண்.1068 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

(ந.க.எண்.பி1/204/2010

**பொருள் எண். 9**

கன்னியாகுமரி மாவட்ட மீன்துறையினரின் சார்பாக, மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களிடமிருந்து வரப்பெற்ற கடிதம், ந.க.எண்–4565/ஆ2/2014–நாள் 31.10.2014–ன்படி இந்கராட்சிக்குட்பட்ட, குளச்சல் மற்றும் கொட்டில்பாடு பகுதிகளில் உள்ள மீனவர் (FCS NFSRS) மற்றும் மீனவ மகளிர் சங்கத்தைச் (FWCS) சேர்ந்த பயனாளிகளின் பட்டியல் மீன்வளத் துறையினரால் தயார் செய்யப்பட்டு அனுப்பப்பட்டுள்ளது. இப்பட்டியலில் உள்ள நபர்களின் பெயர்கள் தேசிய கடல் மீனவர் மற்றும் தமிழ்நாடு மீனவ மகளிர் சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டத்தின் (2014 –15) கீழ் பயன் பெறும் பொருட்டு வறுமைக்கோட்டின் கீழ் வாழ்கிறார்கள் என தீர்மானம் நிறைவேற்றித் தரும்படிக் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. விபரம் பின்வருமாறு:

1. 2014–15–ம் ஆண்டு தேசிய கடல் மீனவர் சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டத்தில் விண்ணப்பித்துள்ள குளச்சல் FCS NFSRS .மீனவர் சங்கத்தை சாா்ந்த கீழ் இணைக்கப்பட்டுள்ள 2104 உறுப்பினர்கள் இத்திட்டத்தின் கீழ் பயன்பெற ஏதுவாக வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ளனர்
2. 2014–15–ம் ஆண்டு தேசிய கடல் மீனவர் சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டத்தில் விண்ணப்பித்துள்ள குளச்சல் FWCS மீனவர் சங்கத்தை சாா்ந்த கீழ் இணைக்கப்பட்டுள்ள 1932 உறுப்பினர்கள் இத்திட்டத்தின் கீழ் பயன்பெற ஏதுவாக வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ளனர்
3. 2014–15–ம் ஆண்டு தேசிய கடல் மீனவர் சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டத்தில் விண்ணப்பித்துள்ள கொட்டில்பாடு FCS NFSRS மீனவர் சங்கத்தை சாா்ந்த கீழ் இணைக்கப்பட்டுள்ள 749 உறுப்பினர்கள் இத்திட்டத்தின் கீழ் பயன்பெற ஏதுவாக வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ளனர்
4. 2014–15–ம் ஆண்டு தேசிய கடல் மீனவர் சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டத்தில் விண்ணப்பித்துள்ள கொட்டில்பாடு FWCS மீனவர் சங்கத்தை சாா்ந்த கீழ் இணைக்கப்பட்டுள்ள 562 உறுப்பினர்கள் இத்திட்டத்தின் கீழ் பயன்பெற ஏதுவாக வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ளனர்.

**அ.குறிப்பு:** 1. பயனாளிகளின் நிலையினை கருத்தில் கொண்டு அவசர அவசியம் கருதி இந்நகர்மன்றத் தலைவர் முன்அனுமதி அளித்ததை மன்றம் ஏற்றுக்கொள்ளலாம்.
2. மேற்காணும் நபர்கள் உள்ளடக்கிய பட்டியலானது, தேசிய கடல் மீனவர் மற்றும் தமிழ்நாடு மீனவ மகளிர் சேமிப்பு மற்றும் நிவாசணத் திட்டத்திற்கு மட்டுமே பொருந்தும்

(ந.க. எண். 2806/2014/ச.அ)

**தீர்மானம் எண்.1069 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 10**

இந்நகராட்சிக்குட்பட்ட கதவு எண்.23—73—ல் உள்ள கட்டிடத்தின் சொத்துவரி கேட்பு பதிவேட்டில் வரிவிதிப்பு எண்.5535—ன்படி, திரு.அப்துல்சமது என்ற பெயரில் உள்ளது. மேற்படி கட்டிடத்தின் குடிநீர் இணைப்பை தற்காலிகமாக துண்டிப்பு செய்ய கோரி மனுதாரர் விண்ணப்பித்துள்ளார். மேற்படி கதவு எண்.23—73—க்கு சொத்துவரி, குடிநீர் கட்டணம் நிலுவை எதுவும் இல்லை. எனவே மனுதாரரின் வேண்டுகோளை ஏற்று மேற்படி கட்டிடத்தின் குடிநீர் இணைப்பை தற்காலிகமாக துண்டிப்பு செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ2/2211/2014)

**தீர்மானம் எண்.1070 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 11**

இந்நகராட்சிக்குட்பட்ட 24—வது வார்டு, காமராஜர் சாலையில் அமைந்துள்ள FI-46 மின்கம்பத்தின் இருபுறமும் உள்ள மின்கம்பங்கள் மிகவும் தொலைவில் உள்ளதால், அப்பகுதி மிகவும் இருளாக உள்ளது. எனவே பொதுமக்களின் நலனை கருத்தில் கொண்டு மின்கம்பம் FI-46-ல் புதிய தெருவிளக்கு அமைக்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ2/2311/2014)

**தீர்மானம் எண்.1071 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 12**

இந்நகராட்சியின் சார்பாக பசுமை தீர்ப்பாயம், சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் தொடரப்படும் வழக்குகளுக்கு நகராட்சி சார்பாக ஆஜராகி எதிர் மனுதாக்கல் செய்வதற்கும், தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கும் ஏதுவாக வழக்கறிஞர் திரு.பி.ஸ்ரீனிவாஸ் அவர்களையும், பணியமைப்பு தொடர்பாக, சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் ஆஜராகி எதிர்மனு தாக்கல் செய்வதற்கும், தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கும் ஏதுவாக வழக்கறிஞர் திரு.கே.விராலிநாதன் அவர்களையும் நியமனம் செய்ய (Standing Council) மன்றம் தீர்மானிக்கலாம்.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம். (ந.க.எண்.சி1/2982/2014)

**தீர்மானம் எண்.1072 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 13**

இந்நகராட்சி பொதுப்பிரிவில் சுமார் 14 வருடங்களாக இயங்கி வந்த 5 KVA UPS மிகவும் பழுதாகிவிட்டதால், பணியின் அவசர அவசியம் கருதி புதிய 3 KVA UPS அரசு நிர்ணய விலையில் (DGS&D) வாங்க, செப்டம்பர் மாதம் இடைத்தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமுலில் இருந்ததால் துறை மூலம் DGS&D விலையில் வாங்கப்பட்டு ரூ.56,157/— வழங்கிய விவரம் மன்றத்தின் பார்வைக்கும், தகவலுக்கும் வைக்கப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் பதிவு செய்யலாம். (ந.க.எண்.அ2/3562 /2007)

**தீர்மானம் எண்.1073 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது. பதிவு செய்யப்பட்டது.**

**பொருள் எண். 14**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.20, இலப்பவிளையில், கதவு எண்.20–6 வீட்டின் முன்பு புதிதாக மின்கம்பம் அமைத்து தெருவிளக்கு அமைக்க மதிப்பீட்டு கட்டணமாக ரூ.9,550/– ஐ பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு செலுத்தப்பட்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ2/1338 /2014)

**தீர்மானம் எண்.1074 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 15**

இந்நகராட்சிக்குட்பட்ட பாலத்தன்கரையில் உள்ள Bore No.7–ன் அருகில் உள்ள ஆழ்துளை கிணறும், வெள்ளிப்பிள்ளையார் கோவில் அருகில் உள்ள Bore No.4, 5 ஆழ்துளை கிணறுகள் மற்றும் வெள்ளிப்பிள்ளையார் கோவில் SUMP அருகில் உள்ள ஆழ்துளை கிணறு எண். 23 ஆகிய நான்கு ஆழ்துளை கிணறுகளுக்கும் புதிதாக 3 Phase மின் இணைப்புகள் வழங்குவதற்கு மதிப்பீட்டு கட்டணத் தொகை ரூ.50,400/– ஐ தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு செலுத்துவதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்

(ந.க.எண்.இ2/2379/2014)

**தீர்மானம் எண்.1075 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 16**

**குளச்சல் நகர்மன்ற 20–வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திரு.எம்.ஏ.ரஹீம் அவர்கள் சொண்டுவரும் தீர்மானம்.**

தமிழக அரசால் இலவச மிக்ஸி, கிரைண்டர், மின்விசிறி, கால்நடைகள் மற்றும் மேல்நிலை மாணவர்களுக்கு மடிகணனி வழங்கும் திட்டங்கள் அறிவிக்கப்பட்டு மூன்றரை ஆண்டுகள் கடந்துவிட்ட நிலையில், குளச்சல் நகராட்சி பகுதியில் மேற்படி இலவச பொருட்கள் இதுநாள் வரையில் வழங்கப்படவில்லை. எனவே மேற்படி இலவச பொருட்களை இந்நகராட்சி பகுதியில் உடனடியாக வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ள தமிழக அரசு மற்றும் மாவட்ட நிர்வாகத்தை கேட்டுக் கொள்ள மன்றம் தீர்மானிக்கலாம்.

**தீர்மானம் எண்.1076 ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

(ஒம்) அ.நசீர்,
நகர்மன்றத் தலைவர்
குளச்சல் நகராட்சி

(உண்மை நகல்)

ஆணையர்(பொ)
குளச்சல் நகராட்சி